அசல்வழக்குஎண். 164/2012 தேதி. 08.03.2023

பி.வா.சா.2 சின்னதுரை

9,10,13,15 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) எனக்கு 38 வயதாகிறது. 1ம் பிரதிவாதி பாப்பாத்தி எனது அம்மா ஆவார். 17 மற்றும் 19 வது பிரதிவாதிகள் எனது சகோதர மற்றும் சகோதரி ஆவார்கள். 1ம் பிரதிவாதி பாப்பாத்தி வாதியின் சகோதரி என்றால் சரிதான். வாதியும், 1ம் பிரதிவாதியும் இவ்வழக்கு தாக்கல் செய்த போது சமூகமான உறவு முறையில் இருந்தார்களா என்றால் சரிதான். நான் சொல்வது போல் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் சுமூக உறவு இல்லை என்பதால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தோகைமலை கிராமத்தில் உள்ள 1,2 அயிட்ட சொத்துக்கள் ராஜாமணிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2) மேற்படி சொத்து ராஜாமணிக்கு அவரது அம்மா நல்லம்மாளின் மூலமாக பாத்தியப்பட்டதாகும். நல்லம்மாளின் கணவர் யார் என்று எனக்கு தெரியாது. நல்லமாளின் மாமனார் மற்றும் நல்லாகவுண்டரின் தகப்பனார் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நல்லாகவுண்டரின் அம்மா பெயர் எனக்கு தெரியாது. 9 மற்றும் 10 ம் பிரதிவாதிகள் தான் சொத்திற்கு உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. நல்லுசாமியின் உடன்பிறந்தவர் தான் நல்லம்மாள் என்றால் சரிதான். இறந்துபோன ராஜாமணிக்கு 1 முதல் 8 அயிட்ட சொத்துக்கள் அவரது தாய் மற்றும் தகப்பனார் மூலம் கிடைக்கப்பெற்ற பூர்வீக சொத்து என்றால் சரிதான். நல்லம்மாள் ராஜாமணியின் தாயார் என்றால் சரிதான். ராஜாமணிக்கு 9 மற்றும் 10 பிரதிவாதிகள் தான் வாரிசு என்றால் சரியல்ல.

3) அருணாசலத்தின் தகப்பனார் நல்லுசாமியின் உடன்பிறந்த சகோதரிதான் நல்லம்மாள் என்றால் சரியல்ல. 9 மற்றும் 10 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் இல்லை. 9 மற்றும் 10 பிரதிவாதிகள் பெயரில் வாரிசு சாண்றுகள் மற்றும் தாவா சொத்துக்களின் பட்டா பெறப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதியின் தகப்பனாரை எனக்கு தெரியாது. எனக்கு 38 வயதாகிறது என்பதால் இவ்வழக்கு பற்றிய முழு விவரமும், இருதரப்பிற்கும் உள்ள உறவு முறைப்பற்றி சரிவர தெரியாது என்றால் சரியல்ல.

4) தாவா 1 முதல் 8 அயிட்ட சொத்துக்கள் ஆதியில் வெள்ளையன் (எ) கருப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி நபருக்கு இரு

மனைவிகள் என்றாலும், முதல் மனைவி மலையம்மாள், இரண்டாவது மனைவி சடைகுட்டி (எ) கருப்பாயி என்றாலும் சரியல்ல. மேற்படி சடைகுட்டி(எ) கருப்பாயிக்கு பிறந்தவர் தான் நல்லாக்கவுண்டர் என்றாலும், நல்லமாளின் கணவர் தான் நல்லாக்கவுண்டர் என்றால் சரியல்ல. ராஜாமணி, நல்லம்மாள் மற்றும் நல்லக்கவுண்டர் என்ற தம்பதிக்கு பிறந்தவர் தான் என்றால் சரியல்ல. 9 மற்றும் 10 ம் பிரதிவாதிகள் மேற்படி மலையம்மாளின் வாரிசுகள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

5) மேற்படி மலையம்மாளுக்கு ராயப்பன் என்ற மகன் இருந்தார் என்றாலும், மேற்படி கருப்பண்ணன் என்ற மகன் இருந்தார் என்றாலும், அந்த கருப்பண்ணனுக்கு பிறந்தவர்கள் தான் 9 மற்றும் 10 ம் பிரதிவாதிகள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 7 ல் உள்ள சங்கதிகள் தவறு என்றாலும், மேற்படி ராஜாமணியின் சகோதரர்கள் 9 மற்றும் 10 பிரதிவாதிகள் என்றால் சரியல்ல. பொதுவாக சட்டப்படி பிரிவு 6 ன் படி வாரியின்றி இறந்துபோன நபரின் சொத்துக்கள், இறந்துப்போன நபரின் தகப்பனாரின் வாரிசுகளுக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நாங்கள் மாமன், மைத்துனர் உறவுமுறை என்பதால் எங்களுக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாதி அருணாச்சலம் எனது மாமா ஆவார். தாவா சொத்து ராஜாமணிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ராஜாமணிக்கு மேற்படி சொத்துக்கள் அவரது தாயார் நல்லம்மாள் மூலமாக கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். ராஜாமணி இறந்தபோது அவருக்கு தாய், தந்தை, கணவன், குழந்தைகள் போன்ற வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். வாதி அருணாச்சலமும், எனது தாயர் 1ம் பிரதிவாதி பாப்பாத்தியும் வாரிசுகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பாப்பத்தியம்மாள் இறந்தபின் அவரது வாரிசு என்ற முறையில் நான் இவ்வழக்கை நடத்தி வருகிறேன். தாவா சொத்து தற்போது என்னுடைய மற்றும் வாதினுடைய சுவாதீனத்தில் தான் உள்ளது.

**<u>4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நல்லுச்சாமி எனக்கு தாத்தா என்றால் சரிதான். மேற்படி நல்லுசாமிக்கு குழந்தைவேல், அருணாச்சலம், பாப்பத்தி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். குழந்தைவேல் மனைவியின் பெயர் கருத்தமணி. கருத்தமணிக்கு வேறு பெயர்கள்

உள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. குழந்தைவேல், கருத்தமணி தம்பதியின் குழந்தைகள் பெயர் தெரியுமா என்றால் தெரியும். செந்தில் குமார் மேற்படி தம்பதிகளின் வாரிசு ஆவார். எங்களது எதிர் உரையில் ராஜாமணிக்கு வாதி அருணாச்சலம் 1ம் பிரதிவாதியான எனது தாயார் பாப்பத்தி மற்றும் எனது மாமா குழந்தைவேல் வாரிசுகள் இறந்துபோன ராஜாமணியின் சொத்திற்கு பங்குரிமையுடையவர்கள் என்று சொல்வில்லை என்றால் சரிதான். மேற்படி குழந்தைவேல், ராஜாமணியின் இறப்பிற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.
S/d. Witness xxxxx
Checked and Uploaded by Typist

S/d.Thiru.S.Pragatheeshwaran,
Additional District Munsif,
Kulithalai.